**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.II**

**இராமநாதபுரம்.**

**முன்னிலை :** திரு. A. ஆதியான். B.A., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.II
இராமநாதபுரம்.

2026 ஆம் ஆண்டு மே மாதம் 27–ம் நாள் புதன்கிழமை

**Crl. M. P. No.512/2026 (CNR NO. TNRM 02-001497-2026)**

**and**

**Crl. M. P. No.524/2026**

**in**

**Cr.No.03/2026 மாவட்ட குற்றப்பிரிவு காவல்நிலையம், இராமநாதபுரம்**

சந்திரன், (வயது 56/2026) (A7)
த/பெ.ஆண்டி . . . மனுதாரர்/7 ம் எதிரி

// எதிர் //

காவல்நிலைய பொறுப்பு அதிகாரி,
மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையம், இராமநாதபுரம்
குற்ற எண். 03/2026
U/Sec. 336(2), 336(3), 340(2), 318(4),
319(2), 61(2) BNS . . . எதிர்மனுதாரர்/புகார்தாரர்

**கண்ணன்,**
த/பெ.மாதவன் . . . பிணை இடையீட்டாளர்/நிகழ்நிலை புகார்தாரர்

இம்மனுவானது 25.05.2026 ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.மாணிக்கம் அவர்கள் ஆஜராகியும், நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் திரு.G.தினேஷ்ராஜ் அவர்கள் ஆஜராகியும் அரசு தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும் எடுத்துரைத்த வாதங்களைக் கேட்டும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ....

**உ த் த ர வு**

**2)** மனுதாரர்/எதிரி இராமநாதபுரம் மாவட்ட குற்றப்பிரிவு காவல்நிலைய குற்ற எண்.03/2026 பிரிவுகள் 336(2), 336(3), 340(2), 318(4), 319(2), 61(2) BNS வழக்கில்

A AATHIYAN Digitally signed by A AATHIYAN Date: 2026.05.27 12:03:21 +0530

21.05.2026–ம் தேதி முதல் நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அவரை பிணையில் விடுவிக்கக்கோரி BNSS பிரிவு 480 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** மனுவின்பேரில் அரசுத்தரப்பில் அறிவிப்பு கொடுக்கப்பட்டு, பதில் பெறப்பட்டது. அரசு தரப்பில் பதிலில் எதிரிக்கு பிணை வழங்கினால் மற்ற எதிரிகளை கைது செய்ய தடையாக இருப்பார் என்றும் வழக்கு சம்மந்தமான ஆவணங்கள் பெற இடையூறாக இருப்பார் என்றும் மீண்டும் குற்றம் செய்ய வாய்ப்புள்ளதாலும் எதிரியை பிணையில் விட்டால் சாட்சிகளை கலைத்தும், ஆவணங்களை அழித்தும் விடுவார் என்பதால் எதிரியை பிணையில் விட கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4)** மனுதாரர்/எதிரி கடந்த 7 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருவதாகவும், மனுதாரர்/7 ம் எதிரியை பிணையில் விடுதலை செய்யும் பட்சத்தில் தலைமறைவாகவோ அல்லது அரசு தரப்பு சாட்சிகளை கலைக்கவோ மாட்டார் என்றும், நீதிமன்றம் விதிக்கும் எவ்விதமான நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுவதாகவும், எனவே எதிரியை பிணையில் விட உத்தரவிட வேண்டி மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டது.

**5)** இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர்/கண்ணன் தரப்பில் மேற்கண்ட எதிரிக்கு பிணை வழங்க ஆட்சேபித்து இன்று பிணை இடையீட்டு மனு (Crl.M.P No.524/2026) தாக்கல் செய்து, எதிரிக்கு பிணை வழங்க கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

**6)** இவ்வழக்கில் மனு மற்றும் வழக்கு கோப்பு பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கின் ஆவணங்கள் மற்றும் அரசுத்தரப்பு ஆட்சேபனைகள் ஆகியவற்றை பரிசீலனை செய்யும்பொழுது எதிரிக்கு முன் வழக்குகள் இல்லை என்பது தெரியவருகிறது. இந்த குற்ற எண்ணின் 5 மற்றும் 6 ம் எதிரிகளுக்கு (buyers) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் Crl.OP.No.9703/2026 ன் உத்தரவு நாள் 21.05.2026 ன் மூலமாக ஏற்கனவே முன்பிணை வழங்கப்பட்டுள்ளது. எனவே மனுதாரர்/7 வது எதிரி சிறையில் இருந்து வரும் காலத்தையும், இந்த வழக்கின் சூழ்நிலை, தன்மைகளையும் கருத்தில் கொண்டு பரிசீலனை செய்கையில் இந்த

A AATHIYAN
Digitally signed by A AATHIYAN
Date: 2026.05.27 12:03:31 +0530

மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது. முடிவில், மனுதாரர்/7 வது எதிரியை பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் பிணையில் விட இந்நீதிமன்றத்தால் உத்தரவிடுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. எதிரி தானும், தனக்காக இரு பிணையதாரர்களுடன் ரூ.10,000/—க்கு பிணைப்பத்திரம் எழுதித்தரவேண்டும்.

2. எதிரி பிணையில் வெளிவந்த நாள் முதல் இராமநாதபுரம் மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் தொடர்ந்து 30 நாட்களுக்கு காலை 10.30 மணிக்கு முன்னிலையாகி கையொப்பம் செய்து வரவேண்டும்.

3) எதிரி பிணையில் வெளிவந்தபிறகு பிணை காலத்தில் எந்தவொரு குற்ற சம்பவத்திலும் ஈடுபடக்கூடாது.

4) எதிரி இவ்வழக்கின் சாட்சிகளையும், சான்றாவணங்களையும் கலைக்க முற்படக்கூடாது.

5) எதிரி இவ்வழக்கின் விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும்.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 27.05.2026 ல் அவையறிய பகரப்பட்டது.

A AATHIYAN

Digitally signed by A AATHIYAN
Date: 2026.05.27 12:03:38 +0530

நீதித்துறை நடுவர் எண்.II
இராமநாதபுரம்.